# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வட மாகாணம்
## மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016
## வரலாறு

**தரம் - 11** **நேரம் :- 2.00 மணி**

**சுட்டெண் :..........................................** **புள்ளி :-**

### பகுதி I

**கவனிக்க –**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாக்களுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.**
- **1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**

1. வெளிநாட்டு இலக்கியமான பூகோளசாஸ்திர பிரவேசம் என்னும் நூலில் இலங்கையைத் “தப்ரபேன்” எனக் குறிப்பிட்டவர்
   1. தொலமி 2. அரிஸ்ரோட்டில் 3. இபன்பதூதா 4. பாகியான்

2. இலங்கையின் வடபகுதியில் வசபமன்னனின் ஆட்சி நிலவியது என்பதற்குச் சான்றான சாசனம் கிடைக்கப்பெற்ற இடம்
   1. நல்லூர் 2. வல்லிபுரம் 3. கந்தரோடை 4. பூநகரி

3. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் வாழ்ந்த கரையோர வெட்டவெளி வாழிடம்.
   1. பாகியன்கல 2. பெல்லன் பதிபெலஸ்ஸ 3. மினிகாகல்கந்த 4. பண்டாரவளை

4. வெள்ளை நிறப் பின்னணியில் சிவப்பு நிறக் கோடுகள் மூலம் வெளிப்புறமும் கீழ்ப்புறமும் அலங்கரிக்கப்பட்ட மடக்கு என்ற மட்பாத்திரம் கண்டெடுக்கப்பட்ட இடம்.
   1. கித்துல்கலபெலிவென 2. பெரகல 3. இபன்கட்டுவ 4. உடரஞ்ஞாமடம

5. இல்லத்தலைவர்களில் இருந்து “கமிக” என்பவர் தெரிவு செய்யப்பட்டார் என்பதைக் குறிப்பிடும் உள்நாட்டு இலக்கியம்?
   1. சமந்தபாசதிகா 2. பூஜாவலிய 3. தீபவம்சம் 4. மகாவம்சம்

6. இலங்கை தொடர்பான அரச கோட்பாட்டுத் தகவல்கள் “X” என்ற நிரலிலும் அதனைப் பின்பற்றிய மன்னர்கள் தொடர்பான தகவல்கள் “Y” என்ற நிரலிலும் தரப்பட்டுள்ளன. இவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. நரேஸ்வர | A. முதலாம் காசியப்பன் |
| 2. மின்னேரியாத் தெய்வம் | B. நிஸ்ஸங்கமல்லன் |
| 3. மலையின் அரசன் | C. குட்டகண்ண அபய |
| 4. சக்கரவர்த்தி | D. மகாசேனன் |

i. ABCD ii. CDAB iii. BCAD iv. ACDB



kalvi.lk

7. அநுராதபுர காலத்தில் 4ஆம் காசியப்ப மன்னன் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்குத் தனியான வைத்தியசாலை அமைத்தான். அவ்வைத்தியசாலைக்கு வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்படும் பெயர்
   1. சொத்திசாலா  2. வெஜ்ஜசாலா  3. பஸவந்திநாமசால  4. உபசக்கரோகநாச

8. புராதன காலத்தில் இடம்பெற்ற கைத்தொழில்கள் "X" நிரலிலும் கைத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் "Y" நிரலிலும் தரப்பட்டுள்ளன. இவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. இரும்புக் கைத்தொழில் | A மணிகார |
| 2. தங்கக் கைத்தொழில் | B ததவய |
| 3. மட்பாண்டக் கைத்தொழில் | C கும்பகார |
| 4. நூல் நூற்கும் கைத்தொழில் | D துலாதார |
| | E கபர |

   1. EDCB  2. ABCD  3. ADCB  4. BCDE

9. புராதன நீர்ப்பாசனத் தொழினுட்பவியலின் உன்னத அம்சமாகக் கருதப்படும் கலிங்கற் தொட்டியின் மூலம் நிறைவேற்றப்பட்ட பிரதான தொழில்.
   1. குளத்தின் அணைக்கட்டிற்குக் குறுக்கே மடைக்கதவில் உண்டாகும் நீர் அமுக்கத்தைச் சமப்படுத்தல்.
   2. குளத்தில் உள்ள மேலதிக நீரை வெளியேற்றல்.
   3. குளத்தின் அலையடிப்பினால் அணைக்கட்டு கழுவப்படுதலைத் தடுத்தல்.
   4. குளத்தில் சேரும் வண்டல் கால்வாயில் பாய்தலைத் தடுத்தல்.

10. தங்கக் கைத்தொழிலின் தொழில்நுட்பத் திறமையை எடுத்துக்காட்டும் நெல்மணி அளவிலான தங்க நகை அகழ்ந்தெடுக்கப்பட்ட விகாரை.
   1. தூபாராம  2. ருவென்வெலிசாய  3. ஜேத்தவனராமய  4. அபயகிரி

11. புராதன காலத்தில் நீளத்தை அளக்கப் பயன்படுத்தப்பட்ட தொகுதி.
   1. பேல்ல, குறுணி, அமுண  2. குஞ்சா, மாசக்க, அக்க
   3. வச, அவுருது, தீதிய  4. பரமாணு, தஜ்ஜாரி, உசக்க

12. ஹோப்பிட்டிகம வர்த்தக சந்தை வரிவிதிப்புத் தொடர்பான விடயங்கள் காணப்படும் கல்வெட்டு,
   1. மிகிந்தலைக் கல்வெட்டு  2. சொரபரத் தூண் கல்வெட்டு
   3. வெஸ்ஸகிரிக் கல்வெட்டு  4. வேவல்கட்டிய கல்வெட்டு

13. மூன்று போகங்களில் நெற்பயிர்ச்செய்கை இடம்பெற்றதாகத் தோணிகல கல்வெட்டு கூறுகின்றது. அக் காலத்தில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த மன்னன்
   1. தாதுசேனன்  2. பண்டுகாபயன்  3. கீர்த்திஸ்ரீமேகன்  4. மகாசேனன்

14. தம்பதெனியாவில் தலதா மாளிகையைக் கட்டிய பெருமைக்குரிய மன்னன்.
   1. 2ஆம் பராக்கிரமபாகு  2. 3ஆம் விஜயபாகு  3. 1ஆம் புவனேகபாகு  4. 4ஆம் பராக்கிரமபாகு

15. பின்வரும் நிகழ்ச்சிகளிடையே குருநாகல் இராச்சியக் காலத்தில் இலங்கைக்கு வந்த ஒரு பிற நாட்டவர் கேட்க அல்லது காணக்கிடைத்த நிகழ்ச்சிகள் இடம்பெறும் விடை.
   A. இரண்டாம் பராக்கிரமபாகு அரசனால் ஜாவா சந்திரபானு தோற்கடிக்கப்படுதல்.
   B. யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளராகச் சப்புமல்குமார செயற்படுதல்
   C. ஐந்தாம் மகிந்த அரசனைக் கைதியாக இந்தியாவுக்குக் கொண்டு செல்லல்.
   D. பிக்குகளின் ஒழுக்காற்று நெறிகள் பற்றித் தம்பதெனியாக் கலந்துரையாடலில் ஆராய்தல்.
   E. செங்கோ தளபதி இலங்கைக்குப் படையெடுத்தல்.

   1. B, D, E ஆகியன  2. C, D, E ஆகியன  3. A, B, C ஆகியன  4. A, C, D ஆகியன


kalvi.lk

16. இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் "X" நிரலிலும் அவர்களுடைய மறுபெயர்கள் "Y" நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. முதலாம் இராஜசிங்க மன்னன் | A - மகாஅஸ்தானகுமரன் |
| 2. இரண்டாம் இராஜசிங்க மன்னன் | B - கண்ணுச்சாமி |
| 3. ஆறாம் புவனேகபாகு மன்னன் | X - டிகிரிகுமாரன் |
| 4. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் | D - முத்துசாமி |
| | E - சப்புமல்குமாரன் |

1. ACDE　　2. CAEB　　3. BCDE　　4. ABCD

17. கி.பி 1638, கி.பி 1766களில் இடம்பெற்ற ஒப்பந்தங்களின் போது ஆட்சிசெய்த கண்டி மன்னர்களின் சரியான விடைத்தொகுதி முறையே
1. 1ஆம் விமலதர்மசூரியன், 2ஆம் விமலதர்மசூரியன்
2. 2ஆம் இராஜசிங்கன், 1ஆம் விமலதர்மசூரியன்
3. 2ஆம் இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன்
4. கீர்த்தி ஸ்ரீவிக்கிரமசிங்கன், செனரத்

18. சூரியமையக் கொள்கையை முதன் முதலாக அறிமுகஞ் செய்தவராகக் கருதப்படும் விஞ்ஞானி யார்?
1. கலிலியோ கலிலி　　2. ஜொஹன்னஸ்கெப்ளர்
3. ஐசாக் நியூற்றன்　　4. நிக்கலஸ் கொபர்னிகர்ஸ்

19. போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தில் தமது அதிகாரத்தைத் தாபிப்பதற்கு மேற்கொண்ட முயற்சியின் போது கையாண்ட உத்தி பின்வருவனவற்றில் யாது?
1. தமது கட்டுப்பாட்டின் கீழ் குசுமாசனதேவிக்கு முடிசூட்டுதல்.
2. கோணப்பு பண்டாராவை அரசராக்குதல்.
3. கண்டி இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல்.
4. கண்டிப் பிரதேச பிக்குகளின் உதவியைப் பெறுதல்.

20. கி.பி 1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை ஆக்கிரமித்த போது, கோட்டையை ஆட்சி செய்த மன்னன்
1. 6ஆம் பராக்கிரமபாகு　　2. 8ஆம் வீரபராக்கிரமபாகு
3. 9ஆம் தர்மபராக்கிரமபாகு　　4. கரலியத்தே பண்டார

21. பணத்தை முதலீடு செய்யும் முதலாளித்துவ வகுப்பு, உழைப்பை விற்கும் தொழிலாளர் வகுப்பு என்ற இரு வகுப்புகள் உருவாகக் காரணம்.
1. மறுமலர்ச்சி　　2. மானியமுறை　　3. கைத்தொழிற்புரட்சி　　4. குடியேற்ற முறைமை

22. தொழிற்புரட்சிக் காலத்தில் கண்டுபிடிப்புக்களைச் செய்தவர்களின் பெயர்கள் நிரல் X இலும், அவர்களுடைய கண்டுபிடிப்புக்கள் நிரல் Y இலும் உள்ளன. நிரல் X இல் உள்ளவர்களை நிரல் Y இல் உள்ள கண்டுபிடிப்புகளுடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடை யாது?

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. ஜோர்ஜ் ஸ்ரீவின்சன் | A தொலைபேசி |
| 2. அலெக்சாண்டர் கிரகம்பெல் | B மின் அடுப்பு |
| 3. வில்லியம் சீமென்ஸ் | C மோட்டார்கார் |
| 4. ஜேம்ஸ் ஹக்கிரீல்ஸ் | D நீராவியால் இயங்கும் புகையிரத என்ஜின் |
| | E ஜெனி இயந்திரம் |

1. DABE　　2. ABCD　　3. DBAC　　4. BCDE



kalvi.lk

23. இலங்கையில் பெருந்தெருக்களையும் புகையிரத வீதிகளையும் அமைப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த பிரித்தானிய ஆளுநர்கள்.
   1. பிரட்ரிக்நோர்த், தோமஸ் மெயிற்லன்ட்
   2. தோமஸ் மெயிற்லன்ட , றொபேட்பிறவுண்றிக்
   3. றொபேட் பிறவுண்றிக், எட்வேட்பாண்ஸ்
   4. எட்வெட் பாண்ஸ், ஹென்றிவோட்

24. கி.பி 1818 முதலாவது சுதந்திரப் போரின் போதும் கி.பி 1848 இரண்டாவது சுதந்திரப் போரின் போதும் பிரித்தானிய ஆளுநர்களாக இருந்தவர்கள் முறையே.
   1. வில்லியம் கிரகெரி, ஆதர்கோடன்
   2. றொபேட் பிறவுண்றிக், டொரிங்டன் பிரபு
   3. எட்வேட் பாண்ஸ், றொபின்சன்
   4. றொபேட் பிறவுண்றிக், ஆதர்கோடன்

**பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் J வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 25, 26 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| ஆண்டு | வரலாற்று காரணங்கள் | தொடர்புடைய நபர்கள் |
|---|---|---|
| A 1797 | D - ஹுஜ்ஜிமரிக்கார் நியமிக்கப்பட்டமை | G ஹெப்பிட்டிப்பொல |
| B 1818 | E – தோணி, துவக்கு, நாய்வரிகள் | N வீரபுரன் அப்பு |
| C 1848 | F – புகையிலை, மீன், உப்பு, சாரயம் | J அவுல்மில்தாரர் |

25. இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக இடம்பெற்ற முதலாவது சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய விடைத்தொகுதி.
   1. A, D ,G 2. B ,E, H 3. B ,D, G 4. C ,E,J

26. இரண்டாவது சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய விடைத்தொகுதி.
   1. C, E, H 2. B, E, H 3. A, F, J 4. A, F, G

27. கி.பி 1782ஆம் ஆண்டு கியூபொயிட் தூதுக்குழு சந்தித்த கண்டி மன்னன்?
   1. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் 2. விக்கிரம ராஜசிங்கன்
   3. இராஜாதிராஜசிங்கன் 4. வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்

**பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் J வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 28 ஆம், 29 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| அச்சிட்ட ஸ்தாபனம் | அச்சிட்ட காலம் | வெளியீட்டின் பெயர் |
|---|---|---|
| A சேர்ச் மிஷனரி சங்கம் | D 1842 | G உரகல |
| B சமய பூஸ்திகா சங்கம் | E 1840 | H மாசிக்கதேக்க |
| C பெப்டிஸ்ட்மிஷனரி | F 1832 | J உரகல |

28. சேர்ச் மிஷனரிச் சங்கத்துடன் தொடர்புடைய விடைத்தொகுதி
   1. A ,D, G 2. A ,F ,H 3. A, E, H 4. A ,F ,J

29. பெப்டிஸ்மிஷனரி சங்கத்துடன் தொடர்புடைய விடைத்தொகுதி
   1. C, E, H 2. C, E ,H 3. C ,F ,J 4. C, D, G

30. இலங்கையில் மறுமலர்ச்சியாளர்களால் அமைக்கப்பட்ட பாடசாலைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் இந்துசமய மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த பாடசாலையும் அதனை அமைத்தவரையும் கொண்ட சரியான விடை
   1. ஆறுமுகநாவலர் - வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை
   2. அநகாரிக தர்மபாலா – பன்னிப்பிட்டிய தர்மபாலா வித்தியாலயம்
   3. ஹென்றி ஸ்ரீல்ஒல்கொட் - ஆனந்த கல்லூரி
   4. சித்திலெப்பை – சாஹிராக் கல்லூரி

31. இலங்கையில் ஒரு மத்தியதரவகுப்பு எழுச்சி பெறுவதற்கு ஏதுவான அரசியல் சீர்திருத்தம் எது?
   1. 1910 குறூ மக்கலம் 2. 1833 கோல்புறூக்கமரன் 3. 1920 மனிங் 4.1931 டொனமூர்



kalvi.lk

32. முதலாம் உலகப் போரின் முடிவில் பிரித்தானியர்களால் உருவாக்கப்பட்ட பொப்பிமலர் இயக்கத்திற்கு எதிராக இலங்கையில் இடதுசாரிகளால் உருவாக்கப்பட்ட இயக்கம்
1. மதுஒழிப்பு இயக்கம் 2. தேசிய சங்கம்
3. சூரியமல் இயக்கம் 4. தொழிலாளர் இயக்கம்

33. இலங்கையில் தேயிலை, தெங்கு, இறப்பர் பயிர்ச்செய்கை ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் முறையே.
1. அம்பலாங்கொட, அகலவத்தை, தலாவாக்கல
2. மகாஇலுப்பல்லம, தலவாக்கல, அகலவத்தை
3. ஹிங்குராங்கொட, லுணுவில, அகலவத்தை
4. தலவாக்கல, லுணுவில, அகலவத்தை

34. பிரித்தானியர் வருகையால் இலங்கையில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களின் விடைத் தொகுதி.
1. பராளுமன்ற அறிமுகம், ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகம்
2. தொழிலாளர் வர்க்க தோற்றம், பெருந்தோட்டப்பயிர் அறிமுகம்
3. மேலைத்தேய பழக்கவழக்கங்கள், ஆங்கிலக் கல்வியின் அறிமுகம்
4. மத்தியதர வர்க்கத்தின் தோற்றம், கிறிஸ்தவ சமய அறிமுகம்

35. சோல்பரி அரசியல் யாப்பின் அடிப்படையில் இடம்பெற்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பிரதமர்.
1. S.W.R.D பண்டரநாயக்க
2. சேர்.ஜோன்.கொத்தலாவல
3. F.R. சேனநாயக்க
4. D.S. சேனநாயக்க

36. இன்று நடைமுறையில் உள்ள விகிதசாரத் தேர்தல் முறையை அறிமுகம் செய்த யாப்பு.
1. 1ஆம் குடியரசு யாப்பு 2. 2ஆம் குடியரசு யாப்பு
3. சோல்பரி யாப்பு 4. டொனமூர் யாப்பு

**கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிகள் ஒவ்வொன்றையும் வாசித்து 37 ஆம், 38 ஆம், 39 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| | | | |
|---|---|---|---|
| A | 1 - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | - | 2 S.W.R.D பண்டாரநாயக்க |
| B | 1 - பாராளுமன்றம் | - | 2 சட்டஉருவாக்கம் |
| C | 1 - சுதந்திர ஊடகத்துறை | - | 2 ஜனநாயகம் |
| D | 1 - லங்கா சமசமாசக்கட்சி | - | 2 D.S. சேனநாயக்க |

37. இரண்டாவது விடயத்தின் வெற்றிக்கு முதலாவது விடயம் காரணமாக இருந்தமையைப் புலப்படுத்தும் சோடி.
1. C 2. A 3. B 4. C

38. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையே தொடர்பின்மையைக் காட்டும் சோடி.
1. A 2. D 3. C 4. B

39. இரண்டாவது நபர் முதலாவதின் உருவாக்கத்திற்கு காரணம் ஆனவர்.
1. B 2. C 3. A 4. D

கீழே A,B எனத் தரப்படும் தலைவர்களின் பெயர்களை அவதானித்து 40ஆவது வினாவிற்கு விடை தருக.
A - ஓட்டோவொன் பிஸ்மார்க்
B - இரண்டாம் வில்லியம்

40. சிறிய நாடுகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஜேர்மனி என்னும் நாடொன்றினை உருவாக்கிய திறமையான தலைவன்.
1. A சரி B பிழை 2. A பிழை B சரி 3. Aயும் Bயும் பிழை 4. Aயும் Bயும் சரி



kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்

வட மாகாணம்

மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016

வரலாறு

**தரம் - 11** **நேரம் :- 3.00 மணி**

**சுட்டெண் :.............................................** **புள்ளி :**

**பகுதி II**

**கவனிக்க –**

- **பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.**
- **பகுதி II இல் இருந்து நான்கு வினாக்களுக்கும்**
- **பகுதி III இல் இருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**
- **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பகுதி I**

**i.** **அ. வழங்கப்பட்டுள்ள இலங்கைப்புறவுருவப்படத்தில் (i) இன் கீழ் தரப்பட்டுள்ள அனைத்து வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தில் (ii) இன் கீழ் தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

(i). கலாஓயா, சூகரதித்த, பொலன்னறுவை, சேனாநாயக்க சமுத்திரம், உடரஞ்ஞாமடம், தேவநகரம், செங்கடகல, மகாநாககுல, மினிஹாஹல்கந்த, இப்பன்கட்டுவ, நல்லூர், களனிகங்கை.

(12 புள்ளிகள்)

(ii). சீனா, பத்தேவியா, உரோம், பாரசீகக்குடா, கள்ளிக்கோட்டை, பிலிப்பைன்ஸ்தீவு (6 புள்ளிகள்)

**ஆ.** (i) கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களோடு தொடர்புடைய நபர்களை வரிசைக்கிரமமாக உமது விடைத்தாளில் தருக.

A. பிராந்திய ஆட்சியாளர்கள் பலருடன்(மாமன்மார்) சண்டையிட்டு, ஆட்சியைக் கைப்பற்றியவன்.
B. வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர பிக்குவிற்கு “சங்கராஜா” பதவியை வழங்கி பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்திய மன்னன்.
C. பாளிமொழியில் இருந்த ஜாதகக் கதைப்புத்தகம் ‘பன்சிய பணஸ்ஜாதகய’ எனும் பெயரில் மொழி பெயர்க்கச் செய்த மன்னன்.
D. கோப்பிக்கான ஏற்றுமதி வரியைக் குறைத்து கோப்பிச் செய்கையின் விருத்திக்கு உதவிய ஆளுநர். ( 4 புள்ளிகள்)

(ii) **A, B ஆகிய உருக்களை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வரிசைக்கிரமமாக விடைத்தாளில் எழுதுக.**

**உரு A**



1. படம் “A” யைப் பெயரிடுக.
2. இது அமைந்துள்ள மாவட்டம் எது?
3. இக் கட்டடம் அமைக்கப் பட்டகாலத்தில் ஆட்சி புரிந்த மன்னன் யார்?
4. இக் கட்டடத்தில் செல்வாக்கு செலுத்தியிருக்கும் கலை மரபு எது? (4 புள்ளிகள் )



kalvi.lk

(iii).

உரு B



1. உரு "B" இல் தரப்பட்டிருக்கும் நபரின் பெயரைக் குறிப்பிடுக.
2. இவரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சி எது?
3. டொனமூர் அரசியல் சீர்திருத்தம் மூலம் இவருக்கு வழங்கப்பட்ட பதவி என்ன ?
4. இலங்கை அரசினால் இவருக்கு வழங்கப்பட்ட கௌரவம் யாது? (4 புள்ளிகள்)

## பகுதி II

**02.**

i. அ) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்ததாக கருதப்படும் வலயங்களுக்குப் பொருத்தமான இடங்களை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

a) தாழ்நில ஈரவலயக் குகை…………………….

b) தாழ்நில உலர்வலய வெட்டவெளிப் பாசறை………….

c) மலையகப் பிரதேச வெட்டவெளி வேட்டை நிலம் ………….

(பண்டாரவளை, பெல்லன்பதிபெலஸ்ஸ, சீகிரியபொத்தான, பட்டதொம்பலன) (3 புள்ளிகள்)

ஆ. பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய குகைகளின் பெயர்களைத் தருக.

A – காட்டுப்பலா விதைகளைத் தீயில் சுட்டுச் சாப்பிட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்த குகை.

B – வளைத்துப் புதைக்கப்பட்ட மனித எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்ட குகை. (4 புள்ளிகள்)

ii. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்களின் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iii. முன் வரலாற்றுக் கால மனிதன் தொடர்பாக பின்வரும் விடயங்கள் பற்றி ஒவ்வொரு ஆதாரங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

a) முறையான மரணச்சடங்கு b) தொழினுட்பம் c) வாழ்க்கை முறை (6 புள்ளிகள்)

**03.**

i. அனுராதபுர காலத்தில் அமைக்கப்பட்ட பாரிய குளங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

ii. பின்வருவனவற்றுடன் தொடர்புடையவற்றை A, B, C, D என்ற ஒழுங்கு முறையில் எழுதுக.

A. அணைக்கட்டு அலைகளினால் அரிப்புறுவதை தடுப்பதற்காக அமைக்கப்பட்ட குளத்தின் உறுப்பு.

B. நீரைக் கால்வாய்க்குத் திறந்து விடுவதற்காக மடைக்கதவுக்குக் குறுக்காக அமைக்கப்பட்டிருக்கும் கற்றூணைக் குறிப்பதற்கு கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட சொல்.

C. மகாவலி கங்கையின் கிளை நதியான அம்பன் கங்கையை மறித்துக் கட்டப்பட்ட புராதன கால பிரமாண்டமான கால்வாய்.



kalvi.lk

D. நீர்ப்பூங்கா தொழினுட்பம் மூலம் புராதன காலம் முதல் இன்று வரை புகழ்பெறும் இடம். (4 புள்ளிகள்)

iii. புராதன கால இலங்கையில் இரும்புத்தாதிலிருந்து இரும்பைப் பிரித்தெடுக்கும் தொழினுட்பம் நன்கறியப்பட்டிருந்தது என்பதனை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. முன்வரலாற்றுக் காலத்தில் நடைமுறை விஞ்ஞான அறிவை மக்கள் கொண்டிருந்தனர் என்பதற்கான சான்றுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

**04.**

i. கீழ்வரும் விகாரைகளை அமைத்த மன்னர்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.
 A. தூபராமதூபி
 B. விஜயசுந்தரராமய விகாரை
 C. ரூவன்வெலிசாய (3 புள்ளிகள்)

ii. இரண்டாம் நகரமயமாக்கலின்போது பின்வரும் இடங்களை முதன்முதலில் தலைநகரங்களாகத் தெரிவு செய்த மன்னர்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் தருக.
 A. தம்பதெனியா
 B. யாப்பகூவ
 C. குருணாகல்
 D. கம்பளை (4 புள்ளிகள்)

iii. முதலாம் நகரமயமாக்கலின் இரண்டவாது இராசதானியான பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கான காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. இரண்டாம் நகரமயமாக்கலின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

**05.**

i. கீழ்வரும் சம்பவங்களுடன் தொடர்புபட்ட மன்னர்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.
 A. கண்டி இராச்சியத்தின் அயலிலுள்ள பிரதேசங்களை ஒன்றுபடுத்திய கண்டி இராச்சியத்தின் முதல் மன்னன்.
 B. கண்டி இராசதானியின் பிரதானியான வீரசுந்தரபண்டாரவின் உதவியைப் பெற்று கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்த சீதாவாக்கை மன்னன்.
 C. யமசிங்க பண்டாரவின் பின்னர் மலையக மன்னனாகி கண்டி இராச்சியத்தில் புதியதோர் அரச மரபை ஆரம்பித்துவைத்த மன்னன். (3 புள்ளிகள்)

ii. முதலாம் விமலதர்மசூரியன் பௌத்த சமயத்தின் எழுச்சிக்கு மேற்கொண்ட பணிகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

iii. 2ஆம் இராஜசிங்கன் கண்டி இராசதானியின் மன்னனாக இருந்த போது எதிர்நோக்கிய சவால்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கண்டி இராச்சிய காலத்தின் பொருளாதாரப் பண்புகள் இரண்டினையும் சமூகப் பண்பு ஒன்றினையும் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

**06.**

i. இலங்கைக்கு வருகை தந்த மேலைத்தேய நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. ஆங்கிலேயர்கள் இலங்கை மீது கவனம் செலுத்த உதவிய இரு காரணிகளும் எவை? (4 புள்ளிகள்)

iii. 1815ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் கண்டி இராச்சியம் கைப்பற்றப்படுவதற்குக் காரணமான ஜோன்டொயிலி அதிகாரியின் தந்திரமான நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. 1818 சுதந்திரப் போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)



kalvi.lk

**07.**

**i.** பௌத்தசமய மறுமலர்ச்சிப் பணிகளில் ஈடுபட்ட பௌத்த மதகுருமார் மூவரைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

**ii.** கீழ்வரும் பணிகளுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A. பௌத்த பிரம்மஞான சங்கத்தை ஆரம்பித்தவர்

B. பஞ்சமகா விவாதங்களைத் தலைமையேற்று நடத்தியவர்.

C. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைப் பிரதேசத்தில் அச்சகம் ஒன்றை நிறுவி இந்துமத மறுமலர்ச்சிப் பணிகளை முன்னெடுத்தவர்.

D. மதராஸா எனும் இஸ்லாமிய சமயப் பாடசாலைகளை புதிய கல்வித் தேவைக்கேற்ப புனரமைப்புச் செய்தவர். (4 புள்ளிகள்)

iii. இலங்கைத் தேசிய சங்கம் தோற்றம் பெறுவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

**08.**

i. மறுமலர்ச்சிக்கால சித்திரக் கலைஞர்கள் மூவரைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii. கீழ்வரும் A, B, C, D என்னும் கூற்றுக்களுடன் தொடர்புபட்ட நாடுகாண் பயணிகளின் பெயர்களை ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A. ஆசியாவுக்கு வருவதற்கான (ஐரோப்பியர்கள்) கடற்பாதையை முதன் முதலாக கண்டுபிடித்தவர்.

B. ஆபிரிக்காவின் தென்முனையை அடைந்து புயல்முனை எனப் பெயரிட்டவர்.

C. புதிய உலகம் என்று அழைக்கப்படும் அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர்.

D. உலகைச் சுற்றி வந்த பெருமைக்குரியவர். (4 புள்ளிகள்)

iii. மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. மறுமலர்ச்சியினால் இலங்கையில் இடம்பெற்ற அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

**09.**

i. கீழ்வரும் கண்டுபிடிப்புக்களுடன் தொடர்புபட்ட கைத்தொழில் துறைகளை ஒழுங்கு முறைப்படி குறிப்பிடுக.

A. பறக்கும் நூனாழி

B. பாதுகாப்பு விளக்கு

C. புகையிரத எஞ்சின் (3 புள்ளிகள்)

ii. விவசாயத்துறையில் கைத்தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட பாரிய மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. இங்கிலாந்து தவிர்ந்த வேறு நாடுகளில் கைத்தொழிற்புரட்சி பரவுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கைத்தொழிற்புரட்சியின் விளைவாக இலங்கையில் இடம்பெற்ற மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)



kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page